# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 741/ 2011 / எம்சி. 8 நாள் : 28.01 .2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 31.01.2011 திங்கள்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஜனவரி 2011

## நிகழ்ச்சி நிரல்

### பொருளடக்கம்

அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
|---|---|
| 1 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 38 – ஒப்பணக்கார வீதி முதல் மணிக்கூண்டு வரை மழைநீர் வடிகால் புதுப்பித்து மூடுபலகை அமைத்தல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - அனுமதி வழங்கப்பட்டது – கூடுதல் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | நகரமைப்புப் பிரிவு - முன்னாள் நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களின் திருவுருவச் சிலை அமைத்தல் - ஆட்சேபனையின்மை சான்று அளித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 50 லாலி ரோடு உடற்பயிற்சி சாலை – வார்டு எண் 51 காந்திபார்க் உடற்பயிற்சி சாலை – பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் - குத்தகை இனங்கள் - ஒப்படைப்பு செய்தல் மற்றும் பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் - தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலகம் மற்றும் நேரம் காப்பாளர் அறை – ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் - கர்நாடகா மாநில அரசு போக்குவரத்துக் கழகம் - ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் தங்கும் அறை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் மீன் மார்க்கெட் - பழுதடைந்த 83 கடைகள் - கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் புதிய மீன் மார்க்கெட் கடைகள் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | Jnnurm – 24x7 குடிநீர் விநியோக திட்டம் - மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 12 | பொது சுகாதாரப் பிரிவு - தனியார் லாரிகள் மூலம் சேகரிக்கப்படும் செப்டிங் டேங்க் கழிவுகள் மற்றும் கழிவு நீர்கள் - உக்கடம் கழிவுநீர் பண்ணையில் சேகரம் செய்தல் - கட்டணம் நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 13 | Jnnurm – பில்லூர் II-வது தனி குடிநீர் திட்டம் - சிப்பம் III – வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை வசதி செய்தல் - ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 14 | Jnnurm – பில்லூர் II-வது தனி குடிநீர் திட்டம் - சிப்பம் III – வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாளர் குடியிருப்பு கட்டுதல் - ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 15 | Jnnurm – பில்லூர் II-வது தனி குடிநீர் திட்டம் - சிப்பம் III – வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுதல் - ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | Jnnurm – பில்லூர் II-வது தனி குடிநீர் திட்டம் - சிப்பம் IV – ராமகிருஷ்ணாபுரத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டும் இடத்தில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுதல் - ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 17 | Jnnurm –பாதாள சாக்கடைத் திட்டம் - உக்கடம் சழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகம் - கழிவுநீர் சேகரிப்பு கிணறு அமைத்தல் - ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | நகரமைப்புப் பிரிவு - பேருந்து நிலையங்களில் ஆடியோ மற்றும் வீடியோ மூலம் விளம்பரம் செய்தல் - விளம்பர நிறுவனங்களை தேர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை**
**உண்மையான் உண்டிவ் வுலகு.**

(குறள் 571)

**விளக்கம்**

**இந்த உலகம், அன்பும் இரக்கமும் இணைந்த கண்ணோட்டம் எனப்படுகிற பெரும் அழகைக் கொண்டவர்கள் இருப்பதால்தான் பெருமை அடைகிறது.**

**திருவள்ளுவர்**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 21.01.2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10847/10/ எம்.டி.4 | வார்டு எண்.38 ராஜ வீதியில் ஒப்பணக்கார வீதி முதல் மணிக்கூண்டு வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் புதுப்பித்து மூடுபலகை அமைத்தல் | 26.50 | 31-12-2010 இரண்டாம் அழைப்பு | திரு/ள் எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 6.42 அதிகம் | 4.96 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1-ல் குறிப்பிட்ட பணி, கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 10847 /2010/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 226 நாள் 31.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளிலுள்ள குடிசை பகுதிகள், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் முறைபடுத்தப்பட்ட மனைப்பிரிவுகள் ஆகிய பகுதிகளில் குடிநீரின் அழுத்தம் குறைவாக உள்ளதால் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய முடியாத பகுதிகளுக்கும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய முடியாத பகுதிகளுக்கும் ஓராண்டு காலத்திற்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.75,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்ததாரர்கள் திரு.கே.எஸ்.ராமலிங்கம் மற்றும் திரு.ஜி.செந்தில்குமார் ஆகியோருக்கு கடந்த 27.4.2010 தேதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டு 1.05.2010 தேதி முதல் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1.05.2010 முதல் 31.10.2010 தேதி வரை லாரி மூலம் குடிநீர் வழங்கப்பட்டதற்கு பட்டியல் தொகையாக ரூ.65,15,898/- வழங்கப்பட்டுள்ளது.

சிறுவாணி அணையின் நீர்மட்டம் கடந்த ஆண்டைவிட குறைவாக உள்ளதாலும் இவ்வாண்டில் நீர்பிடிப்பு பகுதியில் போதுமான அளவு பருவ மழை கிடைக்கப் பெறாததாலும் மேடான பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய சிரமம் ஏற்படும், மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளிலுள்ள முறைபடுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் குடியிருப்புகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாலும் குடிசை பகுதிகளிலுள்ள மக்களுக்கு BSUP திட்டத்தின்கீழ் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்டம் மூலமாகவே குடிநீர் வழங்க உள்ளதாலும் குடிநீர் லாரி மூலம் அப்பகுதி மக்களுக்கும் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிட கூடுதல் செலவீனம் ஆகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் (TT ACT No.14.9)-ல் தெரிவித்துள்ளவாறு மதிப்பீட்டில் ஒரே மாதிரியான இனங்களுக்கு கூடுதல் செலவினத்திற்கு மதிப்பீட்டிற்கு 25 சதவீதத்திற்கு மிகாமல் ஏற்படும் செலவினத்தை ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தின் மூலமாகவே முடிவு செய்யும் அதிகாரம் பெற்ற அமைப்பின் மூலம் அனுமதி பெற்று நிறைவேற்றலாம் என வழிவகை உள்ளதால் மேற்படி கூடுதல் செலவினமாக ரூ.18.75 இலட்சத்திற்கு ஏற்கனவே லாரி மூலம் குடிநீர் வழங்கிவரும் ஒப்பந்ததாரர்கள் திரு.கே.எஸ். இராமலிங்கம் மற்றும் திரு.ஜி.செந்தில்குமார் ஆகியோரை ஏற்கனவே வழங்கியுள்ள விலைப்புள்ளிக்கே லாரி மூலம் குடிநீர் வழங்கவும் அதற்கு தேவையான கூடுதல் நிதியாக ரூ.18.75 இலட்சத்தை ஒதுக்கீடு செய்யவும் இச்செலவினத்தை மேற்கொள்ளவும் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண்.247/2010/ எம்.டி2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 227 நாள் 31.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

திரு. எம். என். கந்தசாமி, தொண்டாமுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்பிய தனது மனுவில் மறைந்த முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியன் அவர்களின் திருவுருவச் சிலையை அவரின் நூற்றாண்டு நினைவு ஆண்டை நினைவுபடுத்தும் வகையில் கீழ்க்கண்ட மூன்று இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் வைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. அம்மனு மீது மாவட்ட ஆட்சித்தலைவர் தனது நே.மு.க. ந.க.எண். 19131 /2010/ இ 2, நாள். 22.1.2011ல் ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட இடங்கள் :-

1. திருச்சி சாலை - இராமநாதபுரம் சந்திப்பு
2. அவினாசி சாலை – லட்சுமி மில் சந்திப்பு
3. கே.ஜி. வளாகம் நுழைவு வாயில் பக்கம்

வரிசை எண் 1, 2, இல் குறிப்பிட்ட இடங்கள் நெடுஞ்சாலைத் துறையின் பாராமரிப்பில் உள்ள இடங்கள். வ. எண். 3 ல் குறிப்பிட்ட இடம் மாநகராட்சி பாராமரிப்பில் உள்ள சாலை.

அரசாணை எண். 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 20.11.1998 இல் சிலை வைத்தல் சம்பந்தமாக அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டுள்ளது.

1. சிலை அமைக்க அரசின் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.
2. சிலை நிறுவியவர்களே (சங்கம், பிரிவு, தனிப்பட்டவர்) அவைகளின் பாதுகாப்பு மற்றும் பாராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
3. ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகளை சீர்குலையாமலிருக்க, அச்சிலைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று திரும்பவும் நிறுவுவது, இது தேவையெனக் கருதப்பட்டால், இது குறித்து அரசிடம் ஆணை பெற்றப்பின் சம்பந்தப்பட்ட தனிநபர், அமைப்பு போன்றவற்றிற்கு மாற்றி அமைக்கப்படலாம்.

அரசாணை எண். 193, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 20.11.1998 இன்படி சிலைகள் வெண்கலத்தால் செய்ய வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே மறைந்த முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியன் அவர்களின் வெண்கலத்தாலான திருவுருவச் சிலையை மேலே குறிப்பிட்ட அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகளுக்குட்பட்டு, மேலே வ. எண். 3 இல் குறிப்பிட்ட இடத்தில், இதர விதிமுறைகளைப் பின்பற்றியும், சிலை அமைப்புக்குழுவினரே வைக்கப்பட உள்ள சிலையை பாராமரிக்க வேண்டும் என்கிற நிபந்தனைகளின் அடிப்படையில், வெண்கலச்சிலை வைத்துக்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஆட்சேபனையில்லை என்று சான்று வழங்க மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அங்கீகரிக்கலாம். ந.க.எண். 742 /2011/ எம். எச். 5.

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 228 நாள் 31.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.50 மற்றும் 51-ல் உள்ள மாநகராட்சி உடற்பயிற்சி சாலைகளான லாலி ரோடு உடற்பயிற்சி மற்றும் காந்திபார்க் உடற்பயிற்சி சாலையினை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது – தொடர்பாக.

பார்வை- ஆணையாளர் அவர்களின் 13.12.2011-ம் தேதிய உத்திரவு.

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்50 மற்றும் 51-ல் உள்ள மாநகராட்சி உடற்பயிற்சி சாலைகளான லாலி ரோடு உடற்பயிற்சி சாலையை மாமன்ற தீர்மான எண்.192 நாள் 21.10.2005-ன்படி திரு.எம்.சத்தியமூர்த்தி என்பவருக்கும், காந்திபார்க் உடற்பயிற்சி சாலையை திரு.ஏ.முரளிதரன் என்பவருக்கும் மாமன்ற தீர்மான எண்.168 நாள் 28.09.2005-ன்படி கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை இதுநாள் வரை வழங்கப்பட்டது.

2011-12-ஆம் ஆண்டிற்கு மேற்படி உடற்பயிற்சி சாலைகளை (ஒரு வருட காலத்திற்கு) உரிமம் நீட்டிப்பு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்யப்பட்டதில் ஆணையாளர் அவர்கள் 13.01.2011-ம் தேதிய உத்திரவில் மேற்படி உடற்பயிற்சி சாலையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் வரும் நிதியாண்டு முதல் ஒப்படை செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் மேற்படி இனத்தினை பொது மின் ஏலம், ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கும் செய்தித்தாளில் விளம்பரம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 121 நாள்.28.10.2011-ன்படி அனுமதி பெறப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண்.255/10/அ1(மே)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 229 நாள் 31.01.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 5

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வருடாந்திர குத்தகை மற்றும் மாதாந்திர உரிம இனங்களுக்கு 25.01.2011 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் உச்சக் கேள்விதாரர்களுக்கு கீழ்க்கண்ட இனங்களை ஒப்படைத்தல் மற்றும் மறு பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி - கோருதல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வருடாந்திர குத்தகை மற்றும் மாதாந்திர உரிம இனங்களுக்கு 25.01.2011 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் உச்சக் கேள்விதாரர்களுக்கு கீழ்க்கண்ட இனங்களை ஒப்படைக்க உயர்ந்தபட்ச வருடாந்திர உரிமம் மற்றும் மாதாந்திர உரிம இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏல தொகை கோரப்பட்டுள்ளது.
வருடாந்திர குத்தகை அடிப்படையில்

இனம் 1 அ. பேருந்து நிலையத்தில் தரைதளத்திலுள்ள இரண்டு கட்டண கழிப்பிடம் ஆண்கள், பெண்கள் கட்டணம் வசூலிக்கும் உரிமம்
ஆ. குளிரூட்டப்பட்ட ஆண்கள், பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம்
இ. பேருந்து நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம்
ஈ. பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ.எண். | ஏலதாரர் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிம மதிப்பு | வருடாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொகை | | உயர்ந்தபட்ச ஏலம்/ ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | எம். மனோகரன் | 15,00,000 | ----- | ---- | |
| 2 | ஏ.வெங்கடேஷ் | | ----- | 15,10,000 | |
| 3 | எம். செல்வம் | | ----- | 16,37,000 | 16,37,000 |
| 4 | சி.ஆர்.விநாயகம் | | ----- | 15,60,000 | |
| 5 | கே.ஏ.அபதாஹீர் | | 15,30,100 | 13,10,000 | |
| 6 | ஜி.இருதயராஜா | | ----- | 16,05,000 | |

இனம் எண். 1 ல் கண்ட இனத்திற்கு ஆறு நபர்கள் கலந்து கொண்டதில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.16,37,000/- கோரிய திரு. எம்.செல்வம் அவர்களுக்கு ஒப்படை செய்யவும்.

இனம் 2. இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் (முதல் தளத்தில் 10x10 என்ற அளவில் வாகன கட்டுப்பாட்டு அறையுடன்)

| வ.எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர உரிம மதிப்பு | வருடாந்திர அடிப்படையில் | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | எம். மனோகரன் | 12,50,000 | ---- | ----- | |
| 2 | எம். ஜெகதீசன் | | 13,10,000 | ----- | |
| 3 | சுதாகர்.ஜோ | | 13,58,000 | ----- | |
| 4 | கே.நடராஜன் | | 12,40,000 | ----- | |
| 5 | ஆர்.பிரபு | | ---- | ----- | |
| 6 | கே.ஏ.அபுதாஹீர் | | 10,10,000 | 51,26,555 | 51,26,555 |
| 7 | ஜீ.இருதயாராஜா | | 12,60,000 | ----- | |

இனம் எண். 2 ல் கண்ட இனத்திற்கு ஏழு நபர்கள் கலந்து கொண்டதில் உயர்ந்தபட்ச லத்தொகையாக ரூ.51,26,555/- கோரிய திரு. கே.ஏ.அபுதாஹீர் அவர்கள் மேற்படி மின் ஏலத்தொகையை தவறுதலாக பதிவு செய்யாதது தொடர்பாக ஆணையாளர் அவர்களிடம் மின் ஏலம் நடைபெற்ற நேரத்திலேயே சந்தித்து தகவல் தெரிவித்ததால் ஆணையாளர் அவர்களின் உத்தரவுப்படி அதனை மறுஏலம் நடத்தவும்,

இனம் 3. பேருந்து நிலையத்தில் உணவகம் நடத்தும் உரிமம் - உணவகம், சமையல்அறை மற்றும் பண்டக அறை

| வ. எண் | பெயர் | நிர்ணயம் செய்யப் பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | கே.ஏ.அபுதாஹீர் | 60,800 | ---- | ----- | |
| 2 | எஸ்.செல்வகுமார் | | | 40,444 | |
| 3 | பனானா லீப் ரெஸ்டாரென்ட் | | | 70,000 | 70,000 |
| 4 | எம்.ஏ.கலீல் ரஹமான் | | ---- | 26,000 | |
| 5 | ஸ்ரீ.அன்னபூர்ண கௌரிசங்கர் | | | 25,000 | |

இனம் எண். 3 ல் கண்ட இனத்திற்கு ஐந்து நபர் கலந்து கொண்டதில் உயர்ந்தபட்ச மாதாந்திர உரிமை தொகை ரூ.70,000/- கோரிய திருவாளர். பனானா லீப் ரெஸ்டாரென்ட் அவர்களுக்கு ஒப்படை செய்யவும்,

இனம் 4. பேருந்து நிலையத்தில் தரைதளத்தில் 1750 சதுரடி கட்டமைப்பு வணிகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு

| வ.எண். | பெயர் | நிர்ணயம் செய்யப் பட்ட மாதாந்திர உரிம தொகை | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | எம்.ஏ.கலீல் ரஹமான் | 33200 | ---- | 21,000 | 21,000 |
| 2 | கே.கே.அய்யப்பன் | | ---- | 16,666 | |

இனம் எண். 4-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர உரிம தொகை ரூ.33,200/-க்கு குறைவாக ஏலதாரர் கோரியுள்ளதால் மேற்படி இனத்தினை மறு ஏலம் நடத்துவதற்கும்,

இனம் என். 5. பேருந்து நிலையத்தில் வலதுபுறம் உள்ள சுமார் 431 சதுரடி கட்டமைப்பு வணிகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு

| வ.எண். | பெயர் | நிர்ணயம் செய்யப் பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | கே.ஏ.அபுதாஹீர் | 9,000 | ---- | 6,336 | |
| 2 | எம்.ஏ.கலீல் ரஹமான் | | ---- | 12,500 | |
| 3 | பி.கார்த்திகேயன் | | 13,500 | 13,000 | |
| 4 | எம். செல்வம் | | ---- | 17,100 | 17,100 |
| 5 | பி.பாலகிருஷ்ணன் | | ---- | 6,150 | |

இனம் எண். 5 ல் கண்ட இனத்திற்கு ஐந்து நபர் கலந்து கொண்டதில் உயர்ந்தபட்ச மாதாந்திர உரிம தொகையாக ரூ.17,100/- க்கு திரு. எம்.செல்வம் அவர்கள் கோரியுள்ளார் மேலும் இவ்வினத்திற்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரி திரு. எம்.ஏ.கலீல் ரஹமான் அவர்கள் விண்ணபித்துள்ளதால் மறு ஏலம் நடத்துவதற்கும்,

**இனம் 6. பேருந்து நிலைய முதல்தளத்தில் 6337 சதுரடி அளவுள்ள RCC கட்டமைப்பு வணிக மற்றும் அலுவலக உபயோகத்திற்கு**

| வ.எ ண். | பெயர் | நிர்ணயம் செய்யப் பட்ட மாத உரிம தொகை | மாதாந்திர உரிம உச்ச கேள்வி | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 1 | எம். அப்பாஸ் | 94,500 | ---- | | |
| 2 | மா.மகுடபதி | | ---- | | |
| 3 | எஸ்.கௌசல்யா | | 1,42,000 | 1,26,000 | 1,42,000 |

**இனம் எண். 6 ல் கண்ட இனத்திற்கு மூன்று நபர் கலந்து கொண்டதில் உயர்ந்தபட்ச மாதாந்திர உரிம தொகையாக ரூ.1,42,000/- மின் ஏலத்தில் கோரிய திருமதி. எஸ். கௌசல்யா அவர்களுக்கு உரிமம் ஒப்படை செய்யவும்,**

**இனம் எண். 7. பேருந்து நிலையம் இரண்டாம் தளத்தில் 6580 சதுரடி அளவுள்ள G.I. சீட் கட்டமைப்பு வணிக மற்றும் அலுவலக உபயோகத்திற்கு இனத்திற்கு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால் இதனை மறு ஏலம் நடத்தவும்,**

**அ. அனுமதிக்கலாம்.**

**இனம் எண். 1ன் உயர்ந்தபட்ச ஏலதாரர் திரு. எம் செல்வம் அவர்களுக்கும்**
**இனம் எண்.3 ன் உயர்ந்தபட்ச ஏலதாரர் திருவாளாகள். பனானா லீப் ரெஸ்டாரென்ட் அவர்களுக்கும்**
**இனம் எண். 6 ன் உயர்ந்தபட்ச ஏலதாரர் திருமதி. கே.கௌசல்யா ஆகியோருக்கும் உரிமம் ஒப்படை செய்யலாம்**

**ஆ. மறு ஏலத்திற்கு கொண்டுவரலாம்.**

**இனம் எண்.2 ல் குறிப்பிட்ட இனத்திற்கு தவறுதலாக மின் ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்ததாலும்,**
**இனம் எண். 4-க்கிற்கு அரசு நிர்ணயித்த மாதாந்திர வாடகை ரூ.33,200/- விட குறைவாக பெறப்பட்டதாலும்,**
**இனம் எண். 5க்கு மறு ஏல ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பம் பெறப்பட்டதாலும்**
**இனம் எண். 7ல் கண்ட இனத்திற்கு எவரும் பதிவு செய்யாததாலும், மறு ஏலத்திற்கு கொண்டு வரலாம்**

**இதன் பொருட்டு இனம் எண். 1, 3, 6 ஆகிய இனங்களுக்கு உரிமம் ஒப்படை செய்யவும், இனம் எண் 2,4,5, மற்றும் 7 ஆகிய இனங்களை மறு ஏலம் நடத்துவதற்கும், மேற்படி பொருள் குறித்து வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.120 நாள் 28.01.2011 அனுமதிபெறப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண்.10070/ 2010/அ1(மே)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 230 நாள் 31.01.2011</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 120 நாள் 28.01.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 6

**பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் மேட்டுப்பாளையம் சாலை புதிய புறநகர் பேருந்து நிலையத்தில் - தமிழ்நாடு அரசு மாநில போக்குவரத்து கழக அலுவலக மற்றும் நேரம் காப்பாளர் அறை இடம் ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்க ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக.**

----------------

**கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் தமிழ் நாடு அரசு மாநில போக்குவரத்து கழக அலுவலக மற்றும் நேரம் காப்பாளர் அறைக்கான இடம் 16.6 x 18.9 = 309 சதுர அடிகள் அளவுள்ள இடத்தினை ஒதுக்கீடு செய்து இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி மேற்கண்ட போக்குவரத்துக் கழகத்திற்கு அலுவலக மற்றும் நேரம் காப்பாளர் அறை அமைத்து கொள்ள மாத வாடகை ரூ.5,990/- என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 122 நாள். 28.1.2011-ன் படி அனுமதி பெறப்பட்டு மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்** **ந.க.எண். 8627/2010/அ1(மே)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 231 நாள் 31.01.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 122 நாள் 28.01.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் - கர்நாடகா மாநில அரசு போக்குவரத்து கழக கோவை கிளைக்கு ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் தங்கும் அறை ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக

பார்வை : 1. கர்நாடகா மாநில போக்குவரத்து கழக கடித எண். KST/BCD/TR/ CBT-CP/3761/10-11, நாள். 13.11.2010.

2. உதவி ஆணையாளர்(பொ) மற்றும நிர்வாக பொறியாளர் (மே) அவர்களின் குறிப்பு.

---------------

பார்வை 1-ல் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் தி/ள். கர்நாடகா மாநில அரசு போக்குவரத்து கழக கோவை கிளைக்கு ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் ஓய்வு அறை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளனர்.

பார்வை 2ல் காணும் உதவி ஆணையாளர் மற்றும் நிர்வாக பொறியாளர் அவர்களின் நேரிடை குறிப்பின்படி மேற்படி பேருந்து நிலையத்தில் மின்சாதன அறைக்கு அருகில் 28 .6 x 18 = 513 சதுரடி அளவுள்ள அறை ஒதுக்கீடு செய்யலாம் என தெரிவுத்துள்ளனர்.

அதன்படி மேற்கண்ட அறையை தி/ள். கர்நாடகா மாநில அரசு போக்குவரத்து கழக கோவை கிளைக்கு 513 சதுரடி கொண்ட அறையினை ஒதுக்கீடு செய்து மாதவாடகை பொதுப்பணித்துறை மதிப்பின்படி நிர்ணயம் செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.123 நாள். 28.01.2011ன்படி ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 8627/2010/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 232 நாள் 31.01.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 123 நாள் 28.01.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 119 நாள் 28.01.2011

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட உக்கடம் மீன் மார்க்கெட்டில் 164 கடைகள் உள்ளன.

மேற்படி கடைகளில் 83 எண்ணிக்கை உள்ள கடைகளை நேராய்வு செய்த போது அவை முற்றிலும் இடித்து பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் இருந்து வருகிறது. விசாரணையில் இக்கடைகள் 97-98ஆம் ஆண்டு முதல் உபயோகிக்க இயலாத நிலையில் இருந்து வருவதாக தெரிய வருகிறது.

எனவே மேற்படி 83 கடைகளை உபயோகிக்க இயலாது என்கிற நிலையில் உள்ளதால் மேற்படி கடைகளுக்கான கேட்பினை பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய பார்வையில் கண்ட வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காண் பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4006 / 2009 / அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 233 நாள் 31.01.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 119 நாள் 28.01.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.117, நாள் 28.01.2011.
- - - - - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பைபாஸ் ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மீன் மார்க்கெட்டில் 31 மீன், கருவாடு மற்றும் ஆட்டிறைச்சி கடைகளுக்கு 21.01.2011 அன்று மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச மாத வாடகை கோரப்பட்டுள்ளது.

1.மீன் கடைகள்

| கடை எண் | பெயர் ( திருவாளர்கள் ) | உயர்ந்தபட்ச தொகை ரூ. | மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | சிவபாலன் | 17100/- | மின் ஏலம் |
| 3 | உசேன் | 3405/- | ஒப்பந்தப்புள்ளி |
| 5 | எம்.ஏ. ஹமீது | 3310/- | ஒப்பந்தப்புள்ளி |
| 6 | எம்.ஏ. அப்பாஸ் | 3301/- | ஒப்பந்தப்புள்ளி |
| 7 | கே. கபீல் | 4000/- | ஒப்பந்தப்புள்ளி |
| 8 | எம். அனீபா | 3225/- | ஒப்பந்தப்புள்ளி |
| 9 | சதகத்துல்லா | 3333/- | ஒப்பந்தப்புள்ளி |
| 10 | ஜெ. இஸ்மாயில் | 3501/- | ஒப்பந்தப்புள்ளி |
| 17 | எம். ஏ. சிராஜுதீன் | 3650/- | ஒப்பந்தப்புள்ளி |
| 18 | எம்.ஏ. பாப்பு | 6000/- | ஒப்பந்தப்புள்ளி |
| 19. | எம். வி. பெரோஸ்கான் | 3275/- | ஒப்பந்தப்புள்ளி |
| 32. | கமலா | 11000/- | மின் ஏலம் |
| 33. | பானுமதி | 3325/- | ஒப்பந்தப்புள்ளி |
| 36. | ஜோதிமணி | 3600/- | ஒப்பந்தப்புள்ளி |
| 37. | குருநாதன் | 3125/- | ஒப்பந்தப்புள்ளி |
| 38. | ஜாகிர்உசேன் | 3010/- | ஒப்பந்தப்புள்ளி |
| 39. | கனகராஜ் | 3050/- | ஒப்பந்தப்புள்ளி |
| 40. | ஏ. நசீர் | 3050/- | ஒப்பந்தப்புள்ளி |
| 41. | நாகராஜ் | 3025/- | ஒப்பந்தப்புள்ளி |
| 42. | எஸ்.கே. வசந்த் | 3111/- | ஒப்பந்தப்புள்ளி |
| 45. | செந்தில் | 7000/- | ஒப்பந்தப்புள்ளி |
| 46. | கே. பிரியா | 7500/- | ஒப்பந்தப்புள்ளி |
| 63. | ஆர். கணேசன் | 3510/- | ஒப்பந்தப்புள்ளி |
| 64. | சந்திரகலா | 4700/- | மின் ஏலம் |
| 65. | வி.கே.சிராஜுதீன் | 4500/- | ஒப்பந்தப்புள்ளி |
| 66. | எஸ். ஹரீஸ் | 3300/- | ஒப்பந்தப்புள்ளி |
| 67. | பாலகிருஷ்ணன் | 4500/- | மின் ஏலம் |
| 68. | உமைது | 4000/- | ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி கடைகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பைவிட கூடுதல் தொகை மாதவாடகையாக கோரப்பட்டுள்ளது. இதில் 28 மீன் கடைகளில் ரூ.3000 முதல் ரூ.3500 வரையும் 14 கடைகளுக்கும் (கடை எண்கள் 3,5,6,8,9,19,33,37,38,39,40,41,42,66) ரூ.3500 முதல் 4000 வரை 4 கடைகளுக்கும் (கடை எண்கள் 10,17,36,63) மற்ற இதர 10 கடைகளுக்கு ரூ.4000க்கு மேல் ஏலக் கோரிக்கை கோரப்பட்டுள்ளது. மேற்படி அனைத்து கடைகளுக்கு 1க்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

மேலும் கடை எண் 1 – மீன்கடைக்கு திரு. சிவபாலன் என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.17,100/- ஐயும் கடை எண் 32 க்கு திருமதி. கமலா என்பவர் கோரிய உயர்ந்த பட்ச ஏலத்தொகை ரூ.11000/-ஐ விட 5 சதவீதம் கூடுதலாக ஏலம் கோர விரும்புவதாகவும், மறு ஏலம் கொண்டுவரத் தெரிவித்து திரு. சிவா என்பவர் ஏல நிபந்தனைப்படி உரிய தொகை செலுத்தியுள்ளார். எனவே கடை எண் 1 மற்றும் 32 க்கு மறுஏலம் கோரலாம்.

2. ஆட்டிறைச்சி கடை

| | | | |
|---|---|---|---|
| 24. | ஜெயராம்ராவ் | 4200/- | ஒப்பந்தப்புள்ளி |

மேலும் கடந்த ஏலத்தில் ஏலதாரா்கள் பங்கு பெறாத மேற்படி ஆட்டிறைச்சி கடைக்கு மட்டுமே மறு ஏலம் நடைபெற்றது. இக்கடைக்கு அரசு மதிப்பைவிட கூடுதல் தொகை மாத வாடகையாக கோரப்பட்டுள்ளது.

3. கருவாட்டுக் கடைகள்

| | | | |
|---|---|---|---|
| 54. | எம். சாகுல் ஹமீது | 3010/- | ஒப்பந்தப்புள்ளி |
| 56. | புருஷோத்தமன் | 3200/- | ஒப்பந்தப்புள்ளி |

மேலும் கடந்த ஏலத்தில் ஏலதாரா்கள் பங்கு பெறாத மேற்படி 2 கருவாட்டு கடைகளுக்கு மட்டுமே மறு ஏலம் நடைபெற்றது. மேற்படி கடைகளுக்கு அரசு மதிப்பைவிட கூடுதல் தொகை மாத வாடகையாக கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்படி உயா்ந்தபட்ச ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ள கடைகளை ஒப்படை செய்ய பாா்வையில் கண்ட வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காண் பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 4006 /10 /அ1(தெ)

மாநகர மன்ற தீா்மானம் எண் 234 நாள் 31.01.2011

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண் 117 நாள் 28.01.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பாா்வை : 1) அரசு ஆணை எண். 92.ந.நி.ம கு.வ. துறை, நாள் 03.07.07.
2) வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண். 118, நாள். 28.01.2011.

*******

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட தியாகி குமரன் மாா்க்கெட் மற்றும் அவினாசி சாலை, மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள கீழ்குறிப்பட்டுள்ள கடைகளின் தற்போதைய அனுபோகதாரா்கள் மேற்படி கடைகளின் உரிமத்தினை பாா்வையில் கண்ட அரசு ஆணையின்படி தங்களது பெயருக்கு பெயா் மாற்றம் செய்து தருமாறும் அதற்குண்டான கட்டணங்களை செலுத்தியும் விண்ணப்பங்கள் அளித்துள்ளனா்.

| வ. எண் | கடை எண் | முந்தைய உரிமதாரா் பெயா் | தற்போதைய அனுபோகதாரா் பெயா் | ஒரு வருட கட்டணம் ரூ. | வைப்புத் தொகை ரூ. | பெயா் மாற்ற கட்டணம் ரூ | இரசீது எண். நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | P 141 | திரு. என். ஜானகிராமன் | திரு. A. ரஹ்மத் ரஹ்மான் | 19,929/- | 19,929 /- | 500/- | 0521 / 18.01.11 |
| 2 | C 10 | திரு. டி. எம். அனீபா, | திரு. கே. காஜாமைதீன் | 3,723/- | 3,723 /- | 500/- | 0497 / 18.01.11 |
| 3 | P 207 | திரு. முகமது இஸ்மாயில் | திரு. ஆா். சித்தரை பாண்டியன் | 8,541/- | 8,541/- | 500/- | 0816 / 13.01.11 |
| 4. | A 12 | திரு. கமாலுதீன் | திருமதி. ஆா். கௌசல்யா | 2,847/- | 2,847/- | 500/- | 0833, 0830 / 18.01.11 |
| 5. | P 209 | திரு. அச்சுதன் நாயா் | திரு. ஏ. ராதாகிருஷ்ணன் | வாரிசு தாரா்கள் | வாரிசு தாரா்கள் | 550/- | 0749 / 13.01.11 |
| 6. | P 210 | திரு. அச்சுதன் நாயா் | திரு. ஏ. ராதாகிருஷ்ணன் | வாரிசு தாரா்கள் | வாரிசு தாரா்கள் | 550/- | 0749 / 13.01.11 |
| 7. | C 9 | திரு. ரத்தினசாமி | திரு. ஆா். சுயம்புலிங்கம் | வாரிசு தாரா்கள் | வாரிசு தாரா்கள் | 550/- | 0978 / 13.01.11 |
| 8. | L 6 | திருமதி. கெம்பம்மாள் | திருமதி. என். சாவித்திரி | வாரிசு தாரா்கள் | வாரிசு தாரா்கள் | 550/- | 0671 / 13.01.11 |
| 9. | P 175 | திருமதி. கருப்பாய்ம்மாள் | திருமதி. ஏ. ருக்குமணி | வாரிசு தாரா்கள் | வாரிசு தாரா்கள் | 550/- | 0833 / 13.01.11 |
| 10. | P 159 | திரு. என். முத்துராஜ் | திரு. பி. கே. சங்கா் | 10,074/- | 10,074/- | 500/- | 0893, 0903 13.01.11. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11. | P 127 | திரு. ஜெய்லானி ராவுத்தர் | திரு. எஸ். சுலைமான் | 4,380/- | 4,380/- | 500/- | 0711, 13.01.11. |
| 12. | P 157 | திரு. அப்துல் கரிம் | திருமதி. ஆர். ஜெயந்தி | 14,235/- | 14,235/- | 500/- | 0944, 0951 13.01.11. |
| 13. | P 197 | திரு. ஆர். கிருஷ்ணன், | திரு. எஸ். கருப்புசாமி | 8,541/- | 8,541/- | 500/- | 0919, 0925 13.01.11. |
| 14. | P 192 | திரு. சேக்தாவுத் | திரு. பி. சந்தோசம் | 8,541/- | 8,541/- | 500/- | 0841, 0847 13.01.11. |
| 15. | C 3 | திரு. காமராஜ் | திரு. டி. முருகன் | 5,694/- | 5,694/- | 500/- | 1012, 1023 13.01.11. |
| 16. | P 103 & P 104 | திரு. ஆர். முத்துசாமி நாயுடு | திரு. எம். தாமோதரன் | வாரிசு தாரர்கள் | வாரிசு தாரர்கள் | 1100/- | 0989, 13.01.11. |
| 17. | T 22 | T. சன்னகேசவலு | T.S. உதயகுமார் | 3212/- | 3212/- | 500/- | 1673, 1686 20.01.11 |
| 18. | T 23 | திரு. ராஜு நாயக்கார் | திரு. எஸ். வெங்கடேஷ் | 3212/- | 3212/- | 500/- | 1702, 1704 20.01.11 |
| | அவினாசி ரோடு வணிக வளாகம் | | | | | | |
| 19. | 14 | திரு. ஆர். பாஸ்கர் | திரு. என். பழனிசாமி | 52920/- | 52920/- | 500/- | 2424, 2421 06.01.11. |
| 20. | 7 | திரு. என். ஸ்ரீனிவாசன் | திரு. எம். முகமது இஸ்மாயில் | 165216/- | 165216/- | 500/- | 2416, 2411 06.01.11. |

மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படி பெயர்மாற்றம் செய்வதற்கான தொகையினை அரசாணையில் தெரிவந்துள்ளபடி செலுத்தியுள்ள மனுதாரர்களுக்கு மேற்படி கடைகளின் உரிமையினை பெயர்மாற்றம் செய்ய பார்வை – 2ல் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே மேற்காண் பொருள் குறித்து மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 387 /11 / அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 235 நாள் 31.01.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 118 நாள் 28.01.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் பில்லூர் குடிநீர் திட்டங்களான இரு குடிநீர் திட்டங்களிலிருந்து தினசரி கிடைக்கப்பெறவுள்ள 200 மில்லியன் லிட்டர் கொள்ளளவு குடிநீரினை கொண்டு, 24 மணி நேரமும் தங்கு தடையின்றி, சீரான குடிநீர் அனைத்து மாநகர பகுதி மக்களுக்கும் வழங்கும் பொருட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் 24x7 குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான தி/ள். பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட். லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டப் பணியில், தற்போது செயல்பட்டு வரும் சிறுவாணி மற்றும் பில்லூர் முதல் திட்ட குடிநீரினை கொண்டு மாநகர பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டுவரும் 34 எண்ணிக்கையிலான மேல் நிலைத் தொட்டிகள் (அல்லது) தரைமட்ட நீர்த் தேக்க தொட்டிகள் அமைந்துள்ள இடங்களுடன் பில்லூர் இரண்டாவது திட்ட குடிநீரினை கொண்டு மாநகரப் பகுதிகளில் விநியோகம் செய்திட புதியதாக 29 எண்ணிக்கையிலான மேல்நிலை தொட்டிகள் அமைக்கப்படவுள்ள இடங்கள் குறித்தும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள மனைப் பிரிவுகளில் உள்ள பூங்கா மற்றும் பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள, மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் குடிநீர் மேல் நிலைத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த் தேக்க தொட்டிகள் அமைக்க 4 மண்டலங்களிலும் சேர்த்து 47 எண்ணிக்கை கொண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மாமன்ற தீர்மான எண் 142, நாள் 29.12.09–ல் ஒப்புதல் பெறப்பட்டு தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினால் இறுதியாக்கப்பட்ட வடிவமைப்பில் 29 எண்ணிக்கை கொண்ட பல்வேறு

கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள மனைப்பிரிவின் பொது ஒதுக்கீடு, பூங்கா, காலி இடங்களில் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

சிறுவாணி குடிநீர் திட்டம் :
தற்போது பயன்பாட்டில் இருந்துவரும் மற்றும் தொடர்ந்து பயன்படுத்தப்படவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் (13 எண்ணிக்கை)

| வ. எண் | மனைப் பிரிவின் பெயர் | மண்டலம் | வார்டு எண் | சர்வே எண் | கிராமம் | தொட்டி கொள்ளளவு (இலட்சம் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | வைசியாள் வீதி | தெற்கு | 42 | 644 | TS-Ward.3 | 9.00 |
| 2 | ஆர்.எஸ்.புரம். டி.பி.ரோடு | மேற்கு | 49 | 913 | TS-Ward.8 | 28.00 |
| 3 | காந்தி பூங்கா | மேற்கு | 51 | 7/784 | TS-Ward.8 | 19.80 |
| 4 | டி.பி.ரோடு | மேற்கு | 51 | 7/1183 | TS-Ward.8 | 20.00 |
| 5 | ஜெயராம் நகர் | மேற்கு | 55 | 238 | குமாரபாளையம் | 10.00 |
| 6 | சேரன் நகர் | மேற்கு | 54 | 115 | குமாரபாளையம் | 6.00 |
| 7 | பூபதி லே அவுட் | மேற்கு | 61 | 546 | தெலுங்குபாளையம் | 20.00 |
| 8 | வெங்கிட்டாபுரம் | மேற்கு | 57 | 500 | தெலுங்குபாளையம் | 2.00 |
| 9 | மடத்தூர், பி.என்.புதூர் | மேற்கு | 59 | 383/1 பகுதி | தெலுங்குபாளையம் | 5.00 |
| 10 | ரேவதி லே–அவுட் | மேற்கு | 59 | 335/1A2 | தெலுங்குபாளையம் | 3.00 |
| 11 | ஐஸ்வர்யா நகர் | மேற்கு | 59 | 356 | தெலுங்குபாளையம் | 10.00 |
| 12 | கோவில்மேடு | மேற்கு | 60 | 452/1 | தெலுங்குபாளையம் | 2.00 |
| 13 | சங்கனூர் சிந்தாமணி | மேற்கு | 62 | 395, 407 பகுதி | சங்கனூர் | 5.00 |

| புதியதாக கட்டப்படவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள். (5 எண்ணிக்கை) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | பாரதி பூங்கா | மேற்கு | 34 | 253/1 | சங்கனூர் | 20.00 |
| 15 | சிந்தாமணி நகர் | மேற்கு | 62 | 399/407 பகுதி | சங்கனூர் | 15.00 |
| 16 | ஹவுசிங் யூனிட் | மேற்கு | 58 | 296/AB | தெலுங்குபாளையம் | 15.00 |
| 17 | ஏ.கே.எஸ். நகர் | மேற்கு | 52 | 112 | TS. Ward 7 | 20.00 |
| 18 | குறிஞ்சி கார்டன் | மேற்கு | 42 | 479/2 B, 479/2 A பகுதி 480/2 பகுதி | TS. Ward 3 | 10.00 |
| பில்லூர் முதலாவது குடிநீர் திட்டத்தில் இராமகிருஷ்ணாபுரத்தில் கட்டப்பட்டுள்ள 30 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டியிலிருந்து சப்ளை செய்யப்படவுள்ள பகுதிகள் தற்போது பயன்பாட்டில் இருந்து வரும் மற்றும் தொடர்ந்து பயன்படுத்தப்படவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் (13 எண்ணிக்கை) | | | | | | |
| 19 | பீளமேடு | வடக்கு | 1 | 358/3A | சௌரிபாளையம் | 15.00 |
| 20 | காமதேனு நகர் | வடக்கு | 17 | 233 | கிருஷ்ணராயபுரம் | 3.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | ஆவாரம்பாளையம் | வடக்கு | 17 | 131 | கிருஷ்ணராயபுரம் | 2.50 |
| 22 | ரத்தினபுரி | வடக்கு | 67 | 43 | சங்கனூர் | 6.00 |
| 23 | ராயப்பா நகர் | வடக்கு | 70 | 260 | கணபதி | 15.00 |
| 24 | காமராஜபுரம் | வடக்கு | 70 | 295/2A | கணபதி | 6.00 |
| 25 | புலியகுளம் | தெற்கு | 22 | 1788 | TS. Ward 10 | 24.00 |
| 26 | டவுன்ஹால் | தெற்கு | 40 | 1234, 1236 | TS. Ward 2 | 16.00 |
| 27 | டாடாபாத் | வடக்கு | 33 | 227 | TS. Ward 11 | 28.00 |
| 28 | வ.உ.சி.பூங்கா | தெற்கு | 28 | 1/923 | TS. Ward 1 | 27.00 |
| 29 | சித்தாபுதூர் | வடக்கு | 29 | 1291 | TS. Ward 11 | 20.00 |
| 30 | ஜெய் நகர் | வடக்கு | 65 | 526/B2, 533/1B2, 534 பகுதி, 535/2பகுதி | சங்கனூர் | 10.00 |
| 31 | ஆர்.ஜி. நகர் | வடக்கு | 66 | 70/1 | சங்கனூர் | 6.00 |

புதியதாக கட்டப்படவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (12 எண்ணிக்கை)

| வ. எண் | மனைப் பிரிவின் பெயர் | மண்டலம் | வார்டு எண் | சர்வே எண் | கிராமம் | தொட்டி கொள்ளளவு (இலட்சம் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 32 | வ.உ.சி.பூங்கா | தெற்கு | 27 | 923, 924 | TS. Ward 1 | 15.00 |
| 33 | ஜே.கே.கார்டன் | தெற்கு | 54 | 50/2, 51, 55 பகுதி, 56, 134/1 | அனுப்பர்பாளையம் | 5.00 |
| 34 | பி.எஸ்.யு.பி. எஸ்.ஆர் (உக்கடம்) | தெற்கு | 54 | 95, 96/1, 96/2, 99 | கோயம்புத்தூர் | 15.00 |
| 35 | லட்சுமி மில் காலனி | தெற்கு | 21 | 376, 175/1 பகுதி | கிருஷ்ணராயபுரம் | 10.00 |
| 36 | சிவராம் நகர் | தெற்கு | 13 | 330 முதல் 331, 337, 341, 342/ பகுதி முழுவதும் | இராமநாதபுரம் | 20.00 |
| 37 | சங்கனூர் ரோடு | வடக்கு | 67 | 41/1 | சங்கனூர் | 10.00 |
| 38 | நேரு வீதி | வடக்கு | 69 | 41/1 | சங்கனூர் | 15.00 |
| 39 | பொன்னி நகர் | வடக்கு | 19 | 601/1,2, 624 பகுதி, 622 பகுதி, 625 பகுதி | கிருஷ்ணராயபுரம் | 20.00 |
| 40 | பி.ஆர்.பி. கார்டன் எஸ்.ஆர் | வடக்கு | 1 | 81/1,2,3, 82/1,2,3, 83/1,2, 84 & 85 | கிருஷ்ணராயபுரம் | 10.00 |
| 41 | வள்ளியம்மாள் வீதி | தெற்கு | 24 | 209/1 B பகுதி | இராமநாதபுரம் | 5.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 42 | ராக்காட்சி கார்டன் | வடக்கு | 72 | 481 பகுதி, 482 பகுதி, 484 பகுதி , 485/1 & 486/1 | கணபதி | 15.00 |
| 43 | மணி கூண்டு | தெற்கு | 38 | 1010 | TS. Ward 2 | 10 |
| <u>பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் இராமகிருஷ்ணாபுரத்தில் கட்டப்பட்டுவரும் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டியிலிருந்து சப்ளை செய்யப்படவுள்ள மேல்நிலை தொட்டி பகுதிகள்</u><br>தற்போது பயன்பாட்டில் இருந்து வரும் மற்றும் தொடர்ந்து பயன்படுத்தப்படவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் (8 எண்ணிக்கை) | | | | | | |
| 44 | சிங்காநல்லூர் | கிழக்கு | 7 | 392 | சிங்காநல்லூர் | 7.00 |
| 45 | காந்தி மா நகர் | வடக்கு | 72 | 28 | கணபதி | 3.00 |
| 46 | டி.ஜே. நகர் | வடக்கு | 3 | 492 | விளாங்குறிச்சி | 10.00 |
| 47 | கே.கே.நகர் | கிழக்கு | 16 | 261, 303, | சௌரிபாளையம் | 10.00 |
| 48 | நேதாஜிநகர் | கிழக்கு | 4 | 72/2 | சிங்காநல்லூர் | 12.00 |
| 49 | எஸ்.ஐ.ஹெச். எஸ் காலனி | கிழக்கு | 4 | 336/1, 337/1, 337/4 | உப்பிலிபாளையம் | 3.00 |
| 50 | அண்ணா நகர் | கிழக்கு | 4 | 426, 427 | சிங்காநல்லூர் | 8.00 |
| 51 | ஜி.வி.ரெசிடென்சி | கிழக்கு | 10 | 109, 111, 113, 115 | சிங்காநல்லூர் | 6.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புதியதாக கட்டப்படவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (12 எண்ணிக்கை) | | | | | | |
| 52. | இராமகிருஷ்ணா புரம் | வடக்கு | 72 | 93, 94 | கணபதி | 20.00 |
| 53 | வி.கே.ஆர். நகர் | வடக்கு | 3 | 293/பகுதி | விளாங்குறிச்சி | 15.00 |
| 54 | திரு நகர் | கிழக்கு | 7 | 563/2, 563/3 | சிங்காநல்லூர் | 15.00 |
| 55 | பாரதி நகர் | கிழக்கு | 4 | 332/2 | சிங்காநல்லூர் | 10.00 |
| 56 | தாகூர் நகர் | கிழக்கு | 5 | 229/2பகுதி, 229/3, 230, 235, 236 & 237 | சிங்காநல்லூர் | 10.00 |
| 57 | ஹட்கோ காலனி | கிழக்கு | 16 | 485/1 A1, 1 B1, 486/1, 487/2, 492/1பகுதி, 2B196/1, 2A, 3A, 503/1B, 2 & 504/2B. | சௌரிபாளையம் | 10.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 58 | அன்னை வேளாங்கன்னி நகர் | கிழக்கு | 15 | 208, 209, 210 | சௌரிபாளையம் | 20.00 |
| 59 | ராஜலட்சுமி நகர் | கிழக்கு | 10 | 56 | லட்சுமிபுரம் | 15.00 |
| 60 | ஸ்ரீ லட்சுமி நகர் | கிழக்கு | 14 | 549/1B, 555/1B | சௌரிபாளையம் | 10.00 |
| 61 | கோத்தாரி நகர் | கிழக்கு | 6 | 279, 289 முதல் 288 வரை, 289/4, 294/2E, 298 பகுதி, 299 & 544/1 | சிங்காநல்லூர் | 5.00 |
| 62 | கருப்பண்ண கவுண்டர் மனைப்பிரிவு | வடக்கு | 2 | 323, 334 | சௌரிபாளையம் | 10.00 |
| 63 | உப்பிலி பாளையம் | கிழக்கு | 11 | 249 | உப்பிலிபாளையம் | 10.00 |

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கூடுதலாக அமைக்கப்படவுள்ள மேல்நிலை தொட்டிகளுக்கு குடிநீர் சப்ளை செய்ய கூடுதலாக கீழ்குறிப்பிட்டுள்ள மூன்று (3) இடங்களில் கீழ்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் பம்பு அறைகள் கட்டப்பட வேண்டுமெனவும் தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மனைப்பிரிவின் பெயர் | மண்டலம் | வார்டு எண் | சர்வே எண் | கிராமம் | தொட்டி கொள்ளளவு (இலட்சம் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ராக்காட்சி கார்டன் | வடக்கு | 72 | 481 பகுதி, 482 பகுதி, 484 பகுதி , 485/1 & 486/1 | கணபதி | 10.00 |
| 2 | சங்கனூர் சிந்தாமணி | மேற்கு | 62 | 395, 407 பகுதி | சங்கனூர் | 10.00 |
| 3 | பாரதி பூங்கா | மேற்கு | 34 | 253/1 | சங்கனூர் | 10.00 |

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கூடுதலாக அமைக்கப்படவுள்ள 29 எண்ணிக்கையிலான மேல்நிலை தொட்டிகளுக்கும், பம்பு அறைகளுடன் கூடிய மூன்று கீழ்நிலை தொட்டிகளுக்கும், தற்போதுள்ள மேல்நிலை தொட்டிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பில்லூர் IIவது குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் 125 எம்.எல்.டி. கொள்ளளவு குடிநீர் சப்ளை செய்ய பதிக்கப்பட வேண்டியுள்ள 85.28 கி.மீ. நீளமுள்ள பிரதான குழாய்கள், பெறப்படும் குடிநீர் பொதுமக்களுக்கு சீராக விநியோகம் செய்ய பதிக்கப்பட வேண்டிய 1365 கி.மீ. நீளமுள்ள விநியோக குழாய்கள், மாநகரின் பகுதியில் தற்போது சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள 2,15,500 எண்ணிக்கையிலான வீடுகள், வீடு உபயோகமில்லாத இணைப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு குடிநீர் வழங்க தேவைப்படும் இணைப்பு குழாய்கள் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 595.24 கோடி ஆகுமென தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினால் மதிப்பிடப்பட்டு திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளதால், மேற்படி திட்ட அறிக்கையினை அரசிற்கு அனுப்பி உரிய மானிய நிதி பெறவும், இப்பணியினை முழுமையாக மேற்கொள்ளவோ அல்லது பகுதி பகுதியாக மேற்கொள்ளவோ உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அ) மாநகரின் அனைத்து பகுதிகளிலும் சீரான, 24 மணி நேரமும், அனைத்து நாட்களிலும் குடிநீர் கிடைக்க கூடிய வகையில் குடிநீர் விநியோகம் வழங்க தற்போது சிறுவாணி, பில்லூர் I மற்றும் பில்லூர் II குடிநீர் திட்டத்தின் கீழ் புதிதாக 29 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 3 எண்ணிக்கையிலான கீழ்நிலை தொட்டிகள் பம்பு அறைகளுடன் கட்டுவதற்காக தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனம் தேர்வு செய்து தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள பொது இடங்கள், மனைப்பிரிவு மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் கீழ்நிலை / மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுவதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) கூடுதலாக அமைக்கப்படவுள்ள மேல்நிலை தொட்டிகள், கீழ்நிலை தொட்டிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் சப்ளை செய்ய பதிக்கப்பட வேண்டிய பிரதான குழாய்கள், பெறப்படும் குடிநீர் பொதுமக்களுக்கு சீராக விநியோகம் செய்ய பதிக்கப்பட வேண்டிய விநியோக குழாய்கள், மற்றும் இணைப்பு குழாய்கள் அமைக்க தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினால் மதிப்பிடப்பட்டு திட்ட அறிக்கை மற்றும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 595.24 கோடி ஆகுமென பெறப்பட்டுள்ளதால் மேற்படி திட்ட அறிக்கையினை அரசிற்கு அனுப்பி உரிய மானிய நிதி பெறவும், இப்பணியினை முழுமையாக மேற்கொள்ளவோ அல்லது பகுதி பகுதியாக மேற்கொள்ளவோ நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 2896/08/ஜே. என். 5

மாநகர மன்ற தீர்மானம் எண் 236 நாள் 31.01.2011

அ) அலுவலகக் குறிப்பு அ, ஆ, ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

ஆ) வார்டு எண் 6, 14 மற்றும் 50-வது வார்டு மாமன்ற உறுப்பினர்கள், தங்களது வார்டுகளில் உள்ள பொது ஒதுக்கீடு, பூங்கா, காலியிடங்களில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க கோரிக்கை விடுத்தனர். மேற்கண்ட வார்டுகளில் மேல்நிலை தொட்டிகள் அமைக்க தேவையான தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் குறித்து தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்திடம் கேட்கவும், தேவைப்படின் அவ்வார்டுகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் :பொது சுகாதாரம் - கோயமுத்தூர் மாநகராட்சி – செப்டிக் டேங்க் கழிவுகள், கழிவு நீர் ஆகியவற்றை சேகரம் செய்யும் தனியார் நிறுவனங்கள் ஒழுங்குபடுத்துதல் - தொடர்பு.

******

கோயம்புத்தூர் மாநகரப்பகுதியில் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் தனியார் நிறுவனங்கள் இக்கழிவுகளை ஆங்காங்கே கழிவுநீர் ஓடைகளில் விட்டு வடுவதால் சுகாதாரக் கேடு, சுற்றுப்புறச் சூழல்கேடு ஆகியன நேரிடுகிறது. இதனை ஒழுங்குபடுத்தும் வண்ணம் இப்பணிகளில் ஈடுபடும் தனியார் நிறுவனங்கள் இக்கழிவுகளை உக்கடம் கழிவு நீர்ப்பண்ணையில் கொண்டு வந்து சேர்க்க அனுமதிக்கலாம். இதற்கு கட்டணமாக ஒரு லாரிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.50/- வீதம் மாதம் ஒன்றிக்கு ரூ.1500/-ம் விதிக்க சுகாதார நிலைக்குழு தனது 28.01.2011ம் தேதிய தீர்மானம் 148-ல் தீர்மானித்துள்ளது. இத்தொகையினை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாநகரில் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் தனியார் நிறுவன லாரிகள் இக்கழிவுகளை உக்கடம் கழிவு நீர் பண்ணையில் சேர்க்க அனுமதிக்கலாம். இதற்காக லாரி ஒன்றிற்கு மாதம் ஒன்றிக்கு ரூ.1,500/- கட்டண நிர்ணயம் செய்யலாம்.

ந.க. எண் :12349 / 2010 / எம்.இ.5

மாநகர மன்ற தீர்மானம் எண் 237 நாள் 31.01.2011

1. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2 கோவை மாநகரப் பகுதியில் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் தனியார் வாகனங்கள் அனைத்தும் மாநகராட்சியில் பதிவு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

3 உக்கடம் கழிவுநீர்ப் பண்ணை தவிர மற்ற இடங்களில் கழிவுகளை விட்டால் அபராதமாக ரூ. 1000/- வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் III பணியான வெள்ளியங்காட்டில் கட்டப்பட்டு வரும் 125 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள மழைநீர் வடிகால் வசதி, சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டிற்கு மாமன்ற தீர்மான எண். 269 நாள். 12.03.2010ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

முதல் ஒப்பந்த அழைப்பான 16.06.2010ல் பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகைக்கு 125.55% சதவீதம் அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காவது ஒப்பந்த அழைப்புகளில் முறையே 29.09.2010, 22.10.2010 மற்றும் 19.11.2010ல் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. கடந்த 15.12.10–ல் ஐந்தாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக இருந்ததால் மூன்று முறை விலைகுறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டதில், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைகுறைப்பு விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தத் தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மழைநீர் வடிகால் வசதி, சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகள் செய்தல் பணி | 12,31,061.93 | தி/ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை | 14,20,216.90<br><br>முதல் விலை குறைப்பு நாள் 23.12.2010 ரூ.14,17,880.90<br><br>இரண்டாவது விலை குறைப்பு நாள் 31.12.2010 ரூ 13,69,390.90<br><br>மூன்றாவது விலை குறைப்பு நாள் 19.01.2011 ரூ 13,53,390/– | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 15.37% சதவீதம் அதிகம்<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 15.18% கூடுதல்<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 11.24% கூடுதல்<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 9.94% கூடுதல் |

மேற்படி நிறுவனம் இதற்கு மேலும் விலைக்குறைப்பு செய்திட இயலாதென தெரிவித்துள்ளதால், ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு 9.94% கூடுதலான விலைவிகிதத்தில் வழங்கப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரைக்கு அனுப்புவது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 9.94% கூடுதலான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள தி/ள் கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை, தமிழக அரசின் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ. துறை நாள் 22.03.2006–ன்படி மதிப்பீட்டு தொகைக்கு 5% கூடுதலான விலைவிகிதத்தில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய அமைக்கப்பட்டுள்ள, “மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்” பரிசீலினைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: எ.இ.இ./ஜே.என்./சி.பி.இ./இ.ஆர்.1 / 10–11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 238 நாள் 31.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் III பணியான வெள்ளியங்காட்டில் கட்டப்பட்டு வரும் 125 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், உட்கட்டமைப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதியின் கீழ் பணியாளர்கள் குடியிருப்பு கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற தீர்மான எண். 269 நாள். 12.03.2010ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

முதல் மற்றும் இரண்டாவது ஒப்பந்த அழைப்புகள் முறையே 16.06.2010 மற்றும் 29.09.2010–ல் பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி முறையே 75.02% மற்றும் 51.97% மதிப்பீட்டுத்தொகைக்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. மூன்றாம் மற்றும் நான்காவது ஒப்பந்த அழைப்புகளில் முறையே 22.10.2010 மற்றும் 19.11.2010ல் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. கடந்த 15.12.10–ல் ஐந்தாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக இருந்ததால் மூன்று முறை விலைகுறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டதில், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைகுறைப்பு விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தத் தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாளர்கள் குடியிருப்பு கட்டுதல் பணி | 72,51,805.25 | தி/ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை | 88,76,564.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 22.40% சதவீதம் அதிகம் |
| | | | | முதல் விலை குறைப்பு நாள் 23.12.2010 ரூ.88,26,272./– | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 21.71% கூடுதல் |
| | | | | இரண்டாவது விலை குறைப்பு நாள் 31.12.2010 ரூ 80,56,096/– | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 11.09% கூடுதல் |
| | | | | மூன்றாவது விலை குறைப்பு நாள் 19.01.2011 ரூ 79,74,586/– | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 9.97% கூடுதல் |

மேற்படி நிறுவனம் இதற்கு மேலும் விலைக்குறைப்பு செய்திட இயலாதென தெரிவித்துள்ளதால், ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு 9.97% கூடுதலான விலைவிகிதத்தில் வழங்கப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரைக்கு அனுப்புவது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு, ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 9.97% கூடுதலான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள தி/ள் கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை, தமிழக அரசின் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ. துறை நாள் 22.03.2006–ன்படி மதிப்பீட்டு தொகைக்கு 5% கூடுதலான விலைவிகிதத்தில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய அமைக்கப்பட்டுள்ள, ''மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்'' பரிசீலினைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: சி.இ./சி.பி.இ./இ.ஆர்.2 / 10–11

மாநகர மன்ற தீர்மானம் எண் 239 நாள் 31.01.2011

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் III பணியான வெள்ளியங்காட்டில் கட்டப்பட்டு வரும் 125 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், உட்கட்டமைப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற தீர்மான எண். 269 நாள். 12.03.2010–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

முதல் மற்றும் இரண்டாவது ஒப்பந்த அழைப்புகள் முறையே 16.06.2010 மற்றும் 29.09.2010ல் பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி முறையே 83.01% மற்றும் 44.40% மதிப்பீட்டுத்தொகைக்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. மூன்றாம் மற்றும் நான்காவது ஒப்பந்த அழைப்புகளில் முறையே 22.10.2010 மற்றும் 19.11.2010ல் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. கடந்த 15.12.10–ல் ஐந்தாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக இருந்ததால் மூன்று முறை விலைகுறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டதில், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைகுறைப்பு விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தத் தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுதல் பணி | 70,95,773.94 | திரு. கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை | 85,22,703.73 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 20.11% சதவீதம் அதிகம் |
| | | | | முதல் விலை குறைப்பு நாள் 23.12.2010 ரூ.84,65,308.75 | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 19.30% கூடுதல் |
| | | | | இரண்டாவது விலை குறைப்பு நாள் 31.12.2010 ரூ 79,25,319.57 | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 11.69% கூடுதல் |
| | | | | மூன்றாவது விலை குறைப்பு நாள் 19.01.2011 ரூ 78,03,596.57 | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 9.98% கூடுதல் |

மேற்படி நிறுவனம் இதற்கு மேலும் விலைக்குறைப்பு செய்திட இயலாதென தெரிவித்துள்ளதால், ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு 9.98% கூடுதலான விலைவிகிதத்தில் வழங்கப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரைக்கு அனுப்புவது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு, ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 9.98% கூடுதலான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை, தமிழக அரசின் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ. துறை நாள் 22.03.2006–ன்படி மதிப்பீட்டு தொகைக்கு 5% கூடுதலான விலைவிகிதத்தில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய அமைக்கப்பட்டுள்ள, “மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்” பரிசீலினைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: சி.இ./சி.பி.இ./இ.ஆர்.1 / 10–11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 240 நாள் 31.01.2011**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் VI பணியான இராமகிருஷ்ணாபுரத்தில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் இடத்தில் உட்கட்டமைப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதியின் கீழ் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற தீர்மான எண். 269 நாள். 12.03.2010ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

முதல், இரண்டு, மூன்று மற்றும் நான்காவது ஒப்பந்த அழைப்புகளில் முறையே 16.06.2010, 29.09.2010, 22.10.2010 மற்றும் 19.11.2010ல் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. கடந்த 15.12.10–ல் ஐந்தாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக இருந்ததால் மூன்று முறை விலைகுறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டதில், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைகுறைப்பு விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தத் தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | இராமகிருஷ்ணாபுரத்தில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி கட்டும் இடத்தில் சுற்றுச்சுவர் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுதல் பணி | 41,94,647.23/– | தி/ள். கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை | 49,35,308.00<br><br>முதல் விலை குறைப்பு நாள் 23.12.2010 ரூ.49,18,064.00<br><br>இரண்டாவது விலை குறைப்பு நாள் 31.12.2010 ரூ 46,59,960.50<br><br>மூன்றாவது விலை குறைப்பு நாள் 19.01.2011 ரூ 46,12,704/– | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 17.66% சதவீதம் அதிகம்<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 17.25% கூடுதல்<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 11.09% கூடுதல்<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 9.97% கூடுதல் |

மேற்படி நிறுவனம் இதற்கு மேலும் விலைக்குறைப்பு செய்திட இயலாதென தெரிவித்துள்ளதால், ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு 9.97% கூடுதலான விலைவிகிதத்தில் வழங்கப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரைக்கு அனுப்புவது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு, ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 9.97% கூடுதலான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள தி/ள் கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை, தமிழக அரசின் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ. துறை நாள் 22.03.2006–ன்படி மதிப்பீட்டு தொகைக்கு 5% கூடுதலான விலைவிகிதத்தில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய அமைக்கப்பட்டுள்ள, ''மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்'' பரிசீலினைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: சி.இ./சி.பி.இ./இ.ஆர்.3 / 10–11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 241 நாள் 31.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டத்தில், உக்கடம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில், உட்கட்டமைப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் சேகரிப்பு கிணறு அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற தீர்மான எண். 269 நாள். 12.03.2010ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

முதல், இரண்டு, மூன்று மற்றும் நான்காவது ஒப்பந்த அழைப்புகளில் முறையே 16.06.2010, 22.10.2010, 19.11.2010 மற்றும் 15.12.2010ல் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. கடந்த 10.01.2011–ல் ஐந்தாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக இருந்ததால் விலைகுறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டதில், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைகுறைப்பு விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தத் தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | உக்கடம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் சேகரிப்பு கிணறு அமைத்தல் பணி | 36,07,444/– | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ், கோவை | 41,45,310.00<br><br>விலை குறைப்பு நாள் 25.01.2011 ரூ.39,66,120/– | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 14.91% சதவீதம் அதிகம்<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 9.94% கூடுதல் |

மேற்படி நிறுவனம் இதற்கு மேலும் விலைக்குறைப்பு செய்திட இயலாதென தெரிவித்துள்ளதால், ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு 9.94% கூடுதலான விலைவிகிதத்தில் வழங்கப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரைக்கு அனுப்புவது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மேற்படி பணிக்கு ஐந்தாவது ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 9.94% கூடுதலான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள தி/.ள் என்.பி.கே. அசோசியேட்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை, தமிழக அரசின் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ. துறை நாள் 22.03.2006–ன்படி மதிப்பீட்டு தொகைக்கு 5% கூடுதலான விலைவிகிதத்தில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய அமைக்கப்பட்டுள்ள, ‘‘மண்டல ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்’’ பரிசீலினைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4803/10/ஜே. என். 5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 242 நாள் 31.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

பொதுமக்களுக்கும், பயணிகளுக்கும், பேருந்து ஓட்டுநர்களுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் பயனளிக்கும் வகையில் பேருந்து நிலையங்களில் ஆடியோ மற்றும் வீடியோ மூலம் நன்மை பயக்கும் விளம்பரங்களையும், செய்திகளையும் முன்னர் டெண்டர் மூலம் தேர்வு செய்யப்பட்ட விளம்பர நிறுவனங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. ரெயில்வே நிலையங்களில் இன்னமும் இது போன்ற விளம்பரங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் அரசுக்கு கணிசமான அளவு வருமானமும் கிடைப்பதோடு, பொது மக்களுக்கும் பயனுள்ளதாக உள்ளது.

கோயம்புத்தூர் மாநகரில் தற்சமயம் விளம்பரங்களுக்கு அதிகத் தேவை உள்ளதாலும், பேருந்து நிலையங்களை பயன்படுத்தும் அனைத்து தரப்பு மக்களுக்கும் சில விளம்பரங்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படுவதாக இருப்பதாலும், அவ்வாறு விளம்பரம் செய்யும்பொழுது விளம்பரக்கட்டணம், அனுமதிக் கட்டணம் போன்றவைகள் மூலம் வருமானம் கிடைக்கும் என்பதாலும் கோயம்புத்தூர் மாநகராட்சியால் கோயம்புத்தூர் மாநகரில் பராமரிக்கப்படும் அனைத்து பேருந்து நிலையங்களிலும், பொதுக்கழிப்பிடங்களிலும் வரையறுக்கப்பட்ட விதங்களில், அளவுகளில், டெண்டர் / பொது ஏலம்மூலம் விளம்பர நிறுவனங்களைத் தேர்வு செய்து தமிழ்நாடு விளம்பர வரி சட்டத்திற்குட்பட்டு, விளம்பரங்கள் வைத்துக் கொள்ள உரிய நடவடிக்கை தொடர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அங்கீகரிக்கலாம். ந.க.எண். :832/ 2011 /எம் எச் 5.**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 243 நாள் 31.01.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி